தாக தெரியவில்லை. அப்படிச் செய்யவேண்டும். தனியார்கள் இன்றைக்கு போட்டி போட்டுக் கொண்டு அந்த ஏலத்தில் கிடைக்கக்கூடிய தொகையை கூட குறைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் அங்கே நடைபெறுகின்றன. அதை தடுப்பதற்கு நகராட்சிகள் வேறு இடத்தில்—இந்த தனியார் சந்தைகள் இருந்தால் இருக்கட்டும்—இந்த நகராட்சி தலைநகரமாக இருக்கிறது—சந்தையை உருவாக்குவதற்கும் அதனால் வருமானம் பெறுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சந்தைகள் மூலமாக ஒரு சில தனி நபர்கள் மட்டுமே வருமானத்தைப் பெற்று கொள்ளை அடிக்கின்ற நிலையைப் போக்க வேண்டும் என்ற முறையில் இந்த அரசு வந்த பிறகு தான் தனியார் சந்தைகளை பொதுச் சந்தைகளாக உள்ளாட்சி மன்றங்களுக்கு உட்பட்ட சந்தைகளாக மாற்ற வேண்டும் என்ற முறையில் நாம் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக இதை குத்தகைக்கு கொடுத்து இருப்பது அ. இ. அ. தி. மு. க. ஆட்சி வந்த பிறகு அல்ல. அதற்கு முன்னாலேயே இருந்தவர்களாலே கொடுக்கப்பட்டதால் அப்படிப் பட்ட நிலை ஏற்பட்டதே தவிர வேறு அல்ல.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் புது மாதிரியான பேருந்து.

435—(*வினா எண். 17181) **திரு. து. புருஷோத்தமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் நூறு பேரை ஏற்றிச் செல்லும் புது மாதிரியான பஸ்களை விடுவதற்கு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் 18-5-1983-லிருந்து 100 பேரை ஏற்றிச் செல்லும் புதுமாதிரியான ஆர்டிக்குலேடட் (Articulat d Single D ck) (நீண்ட பேருந்து) என்று புது மாதிரியான பேருந்து ஒன்றினை இயக்கி வருகிறது.

(ஆ) இந்த பேருந்தில் 59 பிரயாணிகள் உட்கார்ந்து கொண்டும் 100 பேர் நின்று கொண்டும் பயணம் செய்யலாம். பேருந்தை இயக்குவதற்கு ஒரு ஓட்டுநரும் இரண்டு நடத்துனர்களும் தேவை. இதில் 160 குதிரைத்திறன் இன்சின் பொருத்தப்பட்டுள்ளது.

பேருந்தின் அடிச்சட்டம் (Chassis) அசோக் லேலண்ட் கம்பெனியால் தயாரிக்கப்பட்டது. இந்த பேருந்தினை சோதனை ஓட்டமாக இயக்கி பொது மக்களின் விருப்பத்தை அறிந்து தேவைப்பட்டால், இம்மாதிரியான பேருந்துகள் தேவைப்படும் அளவில் விடுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

படுக்கை வசதியுடன் கூடிய பேருந்துகளை அதிக அளவில் இயக்கும் திட்டம்.

436—(*வினா எண். 18709) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை முதல் ஈரோடு வரை செல்லும் படுக்கை வசதியுடன் கூடிய பேருந்துகளைப் போல் மற்ற வழித்தடங்களிலும் விட அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) ஆய்வில் உள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்கும் வசதி உள்ள பேருந்தை இப்போது லாபகரமாக இயக்க அதை மாற்றி அமைக்கக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்கும் வசதி உள்ள பேருந்தில் குறைவான பயணிகளை மட்டும் ஏற்றிக் கொண்டு செல்லக்கூடிய சூழ் நிலையில் அமைக்கப்பட்டு இருப்பதால் அது இப்போது லாபகரமாக இல்லை. எனவே அதிலே ஏற்கெனவே 16 படுக்கைகள் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதை இப்போது மாற்றி 8 படுக்கைகளாகவும் 16 இருக்கைகளாகவும் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அப்படி மாற்றி அமைக்கும் போது அதில் லாபம் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற வழித் தடங்களிலும் தூங்கும் வசதி உள்ள பேருந்துகளை விடுவதற்கு ஆலோசனை உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்த எந்த வழித் தடங்களில் அப்படி ஆலோசனையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.